விடை குறிப்பு

ஆண்டுப் பொதுத் தேர்வு - மார்ச் - 2023 ( TENTATIVE )

11 - ஆம் வகுப்பு - வணிகவியல்

| A TYPE | | | B TYPE | | |
|---|---|---|---|---|---|
| 1 | ஈ | கூட்டு வாரிசுதாரர் | 1 | ஈ | இடம் |
| 2 | இ | பங்குதாரர் | 2 | ஈ | முந்தைய ஆண்டு |
| 3 | ஈ | மொத்த வியாபாரி | 3 | இ | இலாபம் ஈட்டுதல் |
| 4 | அ | பாண்டியர் | 4 | ஆ | வட்டி |
| 5 | ஈ | 1844 | 5 | ஈ | மொத்த வியாபாரி |
| 6 | அ | வைப்பு இரசீது | 6 | இ | பங்குதாரர் |
| 7 | அ | மறு ஏற்றுமதி வியாபாரம் | 7 | ஈ | 1844 |
| 8 | இ | இலாபம் ஈட்டுதல் | 8 | அ | வைப்பு இரசீது |
| 9 | இ | B 2 G - அலிபாபா | 9 | ஈ | கூட்டு வாரிசுதாரர் |
| 10 | ஆ | வட்டி | 10 | இ | ஒப்பந்தம் |
| 11 | அ | ஜெனிவா | 11 | அ | நிதி பரிமாற்றம் |
| 12 | ஈ | 1935 | 12 | அ | ஜெனிவா |
| 13 | இ | ஒப்பந்தம் | 13 | அ | இரண்டு |
| 14 | ஈ | இடம் | 14 | ஈ | 1935 |
| 15 | ஈ | முந்தைய ஆண்டு | 15 | ஆ | செலுத்தல் சமநிலை |
| 16 | ஆ | தனியாள்வணிகம் | 16 | அ | மறு ஏற்றுமதி வியாபாரம் |
| 17 | அ | 25 | 17 | ஆ | தனியாள்வணிகம் |
| 18 | அ | நிதி பரிமாற்றம் | 18 | அ | 25 |
| 19 | ஆ | செலுத்தல் சமநிலை | 19 | அ | பாண்டியர் |
| 20 | அ | இரண்டு | 20 | இ | B 2 G - அலிபாபா |

## பகுதி --- II

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 30 - க்கு கட்டாயம் விடையளிக்கவும்.

**21. நாளங்காடி என்றால் என்ன?**

- **பாண்டியர் ஆட்சிக் காலத்தில்** பொருள்கள் விற்கும் இடத்தினை அங்காடி என அழைக்கப்பட்டது
- அப் பொருள்களின் விற்பனை, **பகலில்** நடந்ததை நாளங்காடி என அழைக்கப்பட்டது

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

**22. தனியாள் வணிகர் என்று அழைக்கப்படுபவர் யார்?**

- தானே முதலிட்டு, தனது சொந்தத் திறமை மற்றும் அறிவைப் பயன்படுத்தி, எவர் ஒருவர் நிர்வாகத்தை மேலாண்மை செய்கிறாரோ, அவரே தனியாள் வணிகர் எனப்படுகிறார்.

**23. பண்டகக் காப்பகங்களின் வகைகள் ஏதேனும் நான்கினை பட்டியலிடுக.**

I. உரிமையின் அடிப்படையில்
1. தனியார் பண்டகக் காப்பகங்கள்
2. அரசு பண்டகக் காப்பகங்கள்
3. பொதுப் பண்டகக் காப்பகங்கள்
4. கூட்டுறவு பண்டகக் காப்பகங்கள்
5. பிணையகாப்பு பண்டகக் காப்பகங்கள்
6. நிறுவனமுறைப் பண்டகக் காப்பகங்கள்
7. விநியோக மையப் பண்டகக் காப்பகங்கள்

II. பண்டங்களின் தன்மைகளின் அடிப்படையில்
1. பொதுப் பண்டகக் காப்பகங்கள்
2. சிறப்புபொருள் பண்டகக் காப்பகங்கள்
3. குளிர்பதன பண்டகக் காப்பகங்கள் அல்லது குளிரூட்டப்பட்ட கிடங்குகள்
4. தட்பவெப்பநிலை கட்டுப்பாட்டு பண்டகக் காப்பகங்கள்
5. தானியங்கி பண்டகக் காப்பகங்கள்

**24. தொழில் செயல்முறை புறத் திறனீட்டல் ( BPO ) என்றால் என்ன?**

- வெளிநிறுவனங்களிடமிருந்து ஒப்பந்த அடிப்படையில் சிறப்பு வேலைகளை அல்லது செயல்களை பெறுவதற்கு தொழில் செயல்முறை புறத்திறனீட்டல் என்று பெயர்.

**25. பெருநிறுவன ஆளுகை இலக்கணம் தருக**

- "நிறுமங்களில் முறையான ஆளுகை மூலம் அந்நாடுகளின் உலகப் பொருளாதாரம் தீர்மானிக்கப்படுகிறது" என்கிறார் திரு. ஜேம்ஸ் உல்சன்.

( அல்லது )

- "பெருநிறுவன ஆளுகை என்பது, சம்பந்தப்பட்ட தொழில் அமைப்பில் நேர்மை, வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புத் தன்மை போன்றவற்றை மேம்படுத்தும் ஒரு செயல்" - உலக வங்கி.

( அல்லது )

- "பெருநிறுவன ஆளுகை என்பது, எந்த ஒரு நிறுமத்தையும் திறம்பட செம்மையாக இயக்கி, வழிநடத்தி, கட்டுப்படுத்த உதவும் ஒரு அமைப்பு முறை".

( அல்லது )

- "பெருநிறுவன ஆளுகை என்பது, எந்த ஒரு நிறுமத்தையும் செம்மையாக இயக்கி, திறம்பட வழிநடத்தி, கட்டுப்படுத்த உதவும் ஒரு அமைப்பு முறை". - கேட்பரி குழுமம்.

**27. குறு நிறுவனங்களுக்குச் ஏதேனும் இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.**

1) மண்பாண்டங்கள் செய்தல்,
2) பழங்கள் மற்றும் காய்கறி விற்பனை செய்தல்,
3) போக்குவரத்து ( மூன்று சக்கர டெம்போக்கள் மற்றும் ஆட்டோக்கள் ) ,
4) பழுது பார்க்கும் கடைகள்,

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

5) குடிசைத் தொழில்கள்,
6) சிறிய கைத்தொழில்கள்,
7) கைத்தறி மற்றும் கைவினை தொழில்கள்.

**27. இடைநிலையர் என்பவர் யார்?**

- தொடக்க நிலை உற்பத்தியாளரிடமிருந்து, இறுதி நிலை நுகர்வோரிடம் சென்றடையும் வரையில், பொருட்கள் மற்றும் சேவைகளின் பரிமாற்றத்தில் ஈடுபட்டுள்ள அனைவருமே இடைநிலையர் ஆவர்.

**28. உலக வர்த்தக அமைப்பு என்றால் என்ன?**

- அனைத்து உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய அமைச்சரவை உலக வர்த்தக அமைப்பின் மிக உயர்ந்த முடிவெடுக்கும் அதிகாரம் படைத்த அமைப்பாகும்

**29. வருமானவரி என்றால் என்ன?**

- ஒரு நபரின் வருமானத்தின் மீது சுமத்தப்படும் வரி, வருமான வரி எனப்படும்.

**30.**

- **இது ஒரு செல்தகு ஒப்பந்தமாகும்.**

**விளக்கம்**

- சட்டத்தால் நடைமுறைப்படுத்தக்கூடிய ஓர் உடன்படிக்கையே சட்டப்படி செல்தகு ஒப்பந்தம் ஆகும்.
- S மற்றும் T என்பவருக்கு இடையே ஏற்பட்ட உடன்படிக்கை சட்டத்தால் நடைமுறைப் படுத்தக்கூடியதாகும். எனவே இது செல்தகு ஒப்பந்தம் ஆகும்.

## பகுதி - III

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 40 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். 7 × 3 = 21

**31. மனித செயல்பாடுகள் என்றால் என்ன? விளக்குக.**

- மனிதன் தனது தனிப்பட்ட விருப்பங்களையும், தேவைகளையும் பூர்த்தி செய்து கொள்வதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகளை மனிதச் செயல்பாடுகள் என்று பெயர்.
- இவை இரண்டு வகைப்படும். அவை –
  1) பொருளாதாரச் செயல்பாடுகள் 2) பொருளாதாரச் சார்பற்ற செயல்பாடுகள்.

**32. இந்துக் கூட்டுக் குடும்பத் தொழின் சிறப்பியல்புகள் ஏதேனும் மூன்றை விவரி.**

1) இந்துச் சட்டத்தின்படி கட்டுப்படுத்துதல்
   - இந்து கூட்டுக் குடும்ப வியாபாரம், இந்து சட்டத்தின்படி கட்டுப்படுத்தப்பட்டு, மேலாண்மை செய்யப்படுகிறது.
2) மேலாண்மை
   - இந்து கூட்டுக் குடும்ப வியாபாரத்தை கட்டுப்படுத்துவது மற்றும் மேலாண்மை செய்வது "கர்த்தா" அல்லது "மேலாளர்" ஆவார்.
   - அக் குடும்பத்தில் உள்ள அனைவரும் கர்த்தாவின் மேல் முழு நம்பிக்கை உள்ளவர்கள்.
   - கர்த்தாவே வெளியாட்களுடன் உடன்படிக்கை செய்ய உரிமை பெற்றவர்.

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

3) பிறப்பால் உறுப்பினர்
   - இக்குடும்பத்தில் உறுப்பினராக, அக்குடும்பத்தில் ஒருவராக பிறக்க வேண்டும்.
   - அக்குடும்பத்தில் பிறக்கும் ஆண் குழந்தையே குடும்ப உறுப்பினராக முடியும்.
   - உறுப்பினராக, எவ்வித சம்மதமோ அல்லது உடன்படிக்கையோ தேவையில்லை.
4) பொறுப்பு
   - கர்த்தாவைத் தவிர மற்ற குடும்ப உறுப்பினர்களின் பொறுப்பு என்பது, வியாபாரத்தில் அவருக்குள்ள பங்கின் அளவுக்கு வரையறுக்கப்பட்டது.
   - கர்த்தா மட்டுமே அவ்வியாபாரத்தில் பொறுப்பாளராக ஆக்க இயலாது.
   - எனினும் கடனீந்தோருக்கு கர்த்தாவின் தனிச் சொத்தைக் கைப்பற்ற உரிமையுண்டு
5) நீடித்த வாழ்வு
   - குடும்ப உறுப்பினரின் மரணம், நொடிப்பு நிலை, மனச் சமநிலை, இழப்பு ஆகியவை வியாபாரத்தைப் பாதிக்காது.
   - அவ்வியாபாரம் தொடர்ந்து மற்ற குடும்ப உறுப்பினர்களால் நடைபெறும்.
6) கர்த்தாவின் உட்கிடை அதிகாரம்
   - வியாபாரத்தின் நலனிற்காக ஒப்பந்தத்தில் ஈடுபடல் மற்றும் வியாபாரக் காரணங்களுக்காக வியாபார சொத்துக்களை அடமானம் வைத்தல் போன்றவற்றைச் செய்யும் உட்கிடையான அதிகாரம் கர்த்தாவிற்கு மட்டுமே உண்டு.
7) இளவர் உறுப்பினர்
   - கூட்டாண்மையில் கூட்டாண்மையின் நலனிற்காகவும், இளவரின் நலனிற்காகவும் மட்டுமே கூட்டாளியாக முடியும்.
   - ஆனால் இந்து கூட்டுக் குடும்பத்தில் பிறந்த குழந்தையும் ஒரு கூட்டு உறுப்பினர் ஆகலாம்.
8) கலைப்பு
   - இந்து கூட்டுக் குடும்பத்தில் உறுப்பினர்கள் அனைவரின் விருப்பத்தின் பேரில் வியாபாரத்தை கலைக்கலாம்

**33. இந்திய ரிசர்வ் வங்கியின் நிர்வாகத்தில் ஈடுபட்டுள்ள நபர்கள் யார்?**

1) ஒரு ஆளுநர் மற்றும் நான்கு துணைநிலை ஆளுநர்கள், நான்கு ஆண்டுகளுக்குப் பதவி வகிக்கும் வகையில் நியமிக்கப்படுவார்கள்,
2) பல்வேறு துறைகளில் இருந்து பத்து இயக்குனர்கள்,
3) இரண்டு அரசு அதிகாரிகள்
4) நான்கு இயக்குநர்கள் ( வட்டார வாரியங்களில் இருந்து ஒவ்வொருவர்)

**34. கப்பல் வாடகை ஒப்பாவணம் என்றால் என்ன?**

- சரக்குகள் பெரிய அளவிலான பொருள்கள் ஒதுக்கப்படும் போது, கப்பல் முழுவதையும் அல்லது கணிசமான பகுதியை வாடகைக்கு எடுத்துக்கொள்வது நல்லது.
- எந்த வகையான ஆவணத்தின் மூலம் ஒப்பந்தம் உருவாக்கப்படுகிறதோ அது 'கப்பல் வாடகை ஒப்பாவணம்' என்று அழைக்கப்படும்.

**35. சமூகப் பொறுப்புணர்வின் வகைகளை வரிசைப்படுத்துக. ( ஏதேனும் 3 )**

1) பொருளாதார பொறுப்புணர்வு
2) சட்டப் பொறுப்புணர்வு
3) தொழில் நன்னெறிமுறை பொறுப்புணர்வு
4) தன் விருப்ப பொறுப்புணர்வு

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

36. கால அளவின் அடிப்படையில் தொழில் நிதியின் ஆதாரங்களின் வகைகளை குறிப்பிடுக.

i) குறுகிய கால நிதி   ii) நடுத்தர கால நிதி   iii) நீண்டகால நிதி

37. இந்தியாவின் முக்கிய ஏற்றுமதி, இறக்குமதி மூன்றினை குறிப்பிடுக.

1) ஏற்றுமதிப் பொருட்கள்
   - i) பெட்ரோலியப் பொருட்கள்
   - ii) நகைகள்
   - iii) ஆட்டொமொபைல்ஸ்
   - iv) பயோகெமிக்கல்
   - v) மருந்துப் பொருட்கள்

2) இறக்குமதிப் பொருட்கள்
   - i) எண்ணெய் முதலான சுரங்க எரிபொருள்
   - ii) வைரம் மற்றும் விலையுயர்ந்த உலோகங்கள்
   - iii) மின்சார இயந்திர சாதனங்கள்
   - iv) கணினி உள்ளிட்ட இயந்திரங்கள்
   - v) ஆர்கானிக் கெமிக்கல்

38. இருதரப்பு வாக்குறுதிகளின் வகைகள் யாவை?

1) இரு தரப்பு மற்றும் தன்னிச்சையான வாக்குறுதி
2) இரு தரப்பு மற்றும் சார்ந்திருக்கின்ற வாக்குறுதிகள்
3) இரு தரப்பு மற்றும் ஒரே சமயத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய வாக்குறுதிகள்.

39. சரக்கு மற்றும் சேவை வரியின் நோக்கங்கள் யாவை? ( ஏதேனும் 3 )

1) இந்தியாவில் சமமான வரி விதத்தினை தோற்றுவிப்பதே சரக்கு மற்றும் சேவை வரியின் முதன்மை நோக்கம் ஆகும்.
2) வரியின் விழுத்தொடராக விளைவினை தவிர்க்க, சரக்கு மற்றும் சேவை வரி முன் செலுத்திய வரியினை சரிகட்டிக்கொள்ள அனுமதிக்கிறது.
3) ஏற்றுமதியினை ஊக்குவிக்க, வசூலிக்கப்பட்ட உள்ளிட்டு வரி திருப்பி வழங்கப்படுகிறது. எனவே ஏற்றுமதியின் மீது வரி இல்லை.
4) வரி அடிப்படையை அதிகரித்தே வரி செலுத்துபவர்களின் எண்ணிக்கை மற்றும் வரி வருவாய் அதிகரிக்கப்படுகிறது.
5) வரி அறிக்கை வழிமுறைகளை எளிமையாக்க, பொதுவான படிவங்கள் வழங்கப் பட்டுள்ளன. வணிகவரி அலுவலகங்களுக்கு செல்லும் நிலை தவிர்க்கப்பட்டுள்ளது.
6) இணையதள வரி செலுத்தல்கள் மற்றும் படிவங்களைச் சமர்ப்பிக்க, சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பு வலையமைப்பு ( GSTN ) என்ற அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது

40. சிறு குறிப்பு வரைக

(i) செலுத்துகைக்கு பிறகு ஆவணங்கள்
- இறக்குமதியாளர் வங்கிப் பணம் செலுத்திய பிறகு, இறக்குமதியாளரிடம் ஆவணங்கள் ஒப்படைக்கப்படுவதையே செலுத்துகைக்கு பிறகு ஆவணங்கள் எனப்படுகிறது.

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

(ii) ஏற்புக்கு பிறகு ஆவணங்கள்
- இம்முறையில் இறக்குமதியாளர், ஏற்றுமதியாளர் வரைந்த மாற்றுச்சீட்டிற்கு ஒப்புதல் தெரிவித்த பிறகே ஆவணங்கள் ஒப்படைக்கப்படுவதையே, ஏற்புக்கு பிறகு ஆவணங்கள் எனப்படுகிறது.
- இறக்குமதியாளரின் வங்கி ஏற்றுமதியாளரின் வங்கியின் மூலம் மாற்றுச்சீட்டின் முதிர்வு நாளிலோ அல்லது அதற்கு முன்பதாகவோ பணத்தை செலுத்தும்.

## பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.   $7 \times 5 = 35$

41. அ) உற்பத்தித் தொழில், வணிகம் மற்றும் வியாபாரம் - ஓர் ஒப்பீடு செய்க

| அடிப்படை | உற்பத்தித் தொழில் | வணிகம் | வியாபாரம் |
|---|---|---|---|
| பொருள் | பிரித்து எடுத்தல், மறு உற்பத்தி,மாற்றுதல் பயனுள்ள தயாரித்தல் போன்ற செயல்களைக் குறிக்கின்றது | பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்குதலைக் குறிக்கின்றது | பொருட்கள் மற்றும் சேவைகள், கொள்முதல் மற்றும் விற்பனையைக் குறிக்கின்றது |
| உள்ளடக்கம் | கச்சாபொருட்கள், பகுதியாக முடிவு பெற்ற பொருட்களை முழு இறுதிப் பொருளாக மாற்றும் அனைத்து நடவடிக்கைகளையையும் உள்ளடக்கியது | வியாபாரம் மற்றும் அதன் தொடர்புடையவற்றை உள்ளடக்கியது. | பொருட்கள் மற்றும் சேவை பரிமாற்றம் உள்ளடக்கியது. |
| முதல் | அதிக முதலீடு தேவை | குறைந்தளவு முதலீடே தேவை | வியாபாரத்தின் தன்மை ப் பொருத்து முதல் தேவை |
| இடர்பாடு | அதிக இடர்பாடு கொண்டது | குறைவான இடர்பாட்டைக் கொண்டது | குறைவான இடர்பாட்டைக் கொண்டது |
| பரிமாணம் பரிமா ணம் பரிமா ணம் | பொருட்கள் மற்றும் சேவையின் வழங்கல் அளிப்பு பக்கத்தைப் பிரதிபலிக்கிறது. | பொருட்கள் மற்றும் சேவையில், தேவை பக்கத்தைப் பிரதிபலிக்கிறது. | இது அளிப்பு மற்றும் தேவை பக்கத்தைப் பிரதிபலிக்கிறது. |
| பயன்பாட்டு உருவாக்கம் | உருவப் பயன்பாட்டை உருவாக்குகிறது | இடப் பயன்பாட்டை உருவாக்குகிறது | உடைமைப் பயன்பாட்டை உருவாக்குகிறது |

( அல்லது )

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

41. ஆ) அமைப்பு முறையேட்டில் அடங்கியுள்ள பொருளடக்கங்கள் யாவை?

1. பெயர் குறித்த உட்பரிவு:
   - நிறுவனத்திற்கு, சட்ட பூர்வமாக அங்கீகரித்த பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும்.
   - ஏற்கெனவே நடைமுறையில் உள்ள நிறுமத்தின் பெயரை ஒத்திருத்தல் கூடாது.
   - அமைப்பு முறையேட்டில் உறுப்பினர்களுக்கு பொறுப்பு வரையறுக்கப்பட்டுள்ளதால், நிறுமத்தின் பெயருடன் "வரையறுக்கப்பட்டது" என்ற வார்த்தை சேர்க்க வேண்டும்.
2. இடம் குறித்த உட்பிரிவு :
   - நிறுமத்தின் பதிவு அலுவலகம் அமைந்துள்ள இடம், இங்கு குறிப்பிடப்பட்டிருக்கும்.
   - தொழில் தொடங்குவதற்கு முன்பே, நிறுமத்தின் பதிவு அலுவலகத்தைத் தெரிவிக்க வேண்டும்.
3. நோக்கம் குறித்த உட்பிரிவு :
   - நிறுமத்தால் செயல்படுத்தக் கூடிய நோக்கங்கள் அனைத்தும் இதில் குறிப்பிடப்பட்டிருக்கும்.
   - நோக்கங்கள், நிறுமங்கள் சட்டத்தை மீறியோ அல்லது பொது நலத்திற்கு எதிராகவும் இருக்கக் கூடாது.
4. பொறுப்புக் குறித்த உட்பிரிவு:
   - பொறுப்புறுதி நிறுமமாயின், அது கலைப்பிற்குள்ளாக நேரிடும் போது, அதன் நிறுமச் சொத்துக்கள் அந்த நிறுமத்தின் நிதிசார் பொறுப்புகளை தீர்க்க இயலாத நிலையில், ஒவ்வோர் உறுப்பினரும் வழங்குவதாக உத்திரவாதம் அளித்த தொகை இங்குக் குறிப்பிடப்படும்.
5. முதல் குறித்த உட்பிரிவு
   - நிறுமத்தின் அங்கிகரிக்கப்பட்ட பங்கு முதல், பங்குகளின் வகைகள் மற்றும் பெயரளவு முதல் (ஒரு பங்கின் குறைந்தப்பட்ச மதிப்பு) ஆகியவற்றைப் பற்றி இதில் குறிப்பிடப்பட்டிருக்கும்.
6. அமைப்பு குறித்த உட்பிரிவு
   - பங்குதாரர்கள், தாங்கள் ஒன்றினைந்து நிறுமமாக செயல்பட விரும்பும், தங்களின் விருப்பத்தை இது வெளிப்படுத்துகிறது.
   - பொதுநிறுமம் எனில் ஏழு நபர்களும், தனி நிறுமம் எனில் இரண்டு நபர்களும், அமைப்பு முறையேட்டில் சாட்சிகள் முன்னிலையில் கையெழுத்து இடவேண்டும்.

42. அ) பொதுக் கழகத்தின் ஏதேனும் மூன்று நிறைகள் மற்றும் மூன்று குறைகளை விளக்குக

**நிறைகள்:**

1) தன்னாட்சியுரிமை
   - அரசின் கட்டுப்பாடு இல்லாமல், தன்னீட்சியாக இயங்குகிறது.
   - வியாபார சூழ்நிலைகளுக்கு ஏற்பவும், அதன் நன்மைக்களுக்காகவும், திறந்தமனதுடன் முடிவு எடுக்கின்றது.
2) சட்ட அமைப்புகளின் கட்டுப்பாடு
   - பாராளுமன்றம் அல்லது சட்டசபை அமைப்புகளின் குழுக் கட்டுப்பாடு மூலம் கட்டுப்படுத்துகிறது.
   - இதன் செயல்பாடுகள், அதன் நன்மைக்கு எதிராக இருந்தால், அதைச் சுட்டிக் காட்டவும் செய்கிறது.



3) தயார் நிலை
   - இவை சிறப்புச் சட்டத்தின் மூலம் உருவாக்கப்படுவதால் , அதன் தேவைகளையும், நோக்கங்களையும் நிறைவேற்றிக் கொள்கின்றன.
4) அரசின் தலையீடின்மை
   - அரசியல் தலையீடுகளால் பொதுக்கழகத்திற்கு, எவ்வித பாதிப்பும் ஏற்படுவது இல்லை.
   - இதன் கொள்கைகளும் செயல்பாடுகளும் தொடர்ந்து நடைபெறும்.
5) குறைந்த அளவிலான சுரண்டலுக்கே வாய்ப்பு
   - பொதுக் கழகத்தின் இயக்குநரவையில், சமுதாயத்தின் பலதரப்பட்ட பணியாளர்கள், நுகர்வோர்கள், சமுதாய நல விரும்பிகள் ஆகியோரை, அரசு தேர்ந்தெடுத்து இருப்பதால், சுரண்டல் மற்றும் ஊழல் ஆகியவை இருப்பது இல்லை.

**குறைகள்:**

1) தன்னாட்சி மற்றும் நெகிழ்வுத் தன்மை
   - தன்னாட்சி மற்றும் நெகிழ்வுத் தன்மை என்பது, ஏட்டளவில் மட்டுமே உள்ளது.
   - துறை அமைச்சர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் அரசியல்வாதிகள் மூலம் அதிகளவில் இடையூறு ஏற்படுகிறது.
2) நெகிழ்வு தன்மையற்ற அரசியலமைப்பு
   - இதனை உருவாக்கும் அரசியல் சட்டப் பிரிவுகள் நெகிழ்வுத்தன்மை அயற்றவை.
   - எவ்விதத்திலும் மாற்றக்கூடியது அல்ல.
3) குறைவான மேலாண்மைத் திறமை
   - இதன் மேலாண்மை இயக்குநர்கள் பெரிய அளவில், மேலாண்மை அறிவு பெற்றவர்களாகவோ, திறமைசாலிகளாகவோ இருப்பதில்லை.
4) சிறப்புச் சட்டம் இயற்றுவதில் சிக்கல்
   - சிறப்புச் சட்டங்களால் மட்டுமே இதனை உருவாக்க முடியும்.
   - இதனை உருவாக்கும் சட்ட நடைமுறைகள் சிக்கலானவை.
5) முரண்பாடுகள்
   - இதன் இயக்குனரவை உறுப்பினர்களின், பல்வேறு குழுக்களிடையே பல்வேறு முரண்பாடுகள் உருவாகின்றன.
   - இதனால் பொதுக்கழகங்களின் செயல்திறன் பெரிதும் பாதிக்கப்படுகிறது.

( அல்லது )

42. ஆ) குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு நிதி உதவி வழங்கும் நிறுவனங்கள் யாவை?

1) வணிக வங்கிகள்
   - பொதுத்துறை வங்கிகள் (எ.கா.) பாரத ஸ்டேட் வங்கி, இந்தியன் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, கனரா வங்கி
   - தனியார் துறை வங்கிகள் (எ.கா.) ஐசிஐசிஐ, ஆக்சிஸ் வங்கி, சிட்டி யூனியன் பாங்க், எச்டிஎப்சி, கரூர் வைஸ்யாபாங்க், தமிழ்நாடு மெர்கண்டைல்வங்கி.
2) வட்டார ஊரக வங்கிகள்
   - (எ.கா.) பாண்டியன் கிராம வங்கி, பல்லவன் கிராம வங்கி, வள்ளலார் கிராம வங்கி



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

3) கூட்டுறவு வங்கிகள்
- (எ.கா.) தமிழ்நாடு மாநிலக்கூட்டுறவு வங்கி (TNSC bank) , மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள்

4) குறுமநிதி நிறுவனங்கள்
- (எ.கா.) முத்ரா வங்கி

5) வங்கி அல்லாத நிதி நிறுவனங்கள்
- (எ.கா) தேசியச் சிறுதொழில் கழகம் லிமிடெட் (NSIC)
  இந்தியச் சிறு தொழில் மேம்பாட்டு வங்கி (SIDBI)

43. அ) பல்வேறு வகையான வங்கிகளைச் செயல்பாடுகளின் அடிப்படையில் விவரிக்கவும்

1) மத்திய வங்கி
- இது நாட்டின் அரசாங்காத்திற்கு சொந்தமானது
- ஒரு நாட்டின் அனைத்து வங்கிகளின் செயல்பாடுகளை கட்டுப்படுத்தும் அதிகாரம் இந்த உச்சவங்கியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது
- மைய வங்கிகள் வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு பெயர்களால் அழைக்கப்படுகின்றன.
- இந்தியாவில் , இந்திய ரிசர்வ் வங்கி (Reserve Bank of Inda - RBI) மைய வங்கியாகச் செயல்படுகிறது.

2) வணிக வங்கிகள்
- இவ்வகைவங்கிகள் பொதுமக்களிடமிருந்து வைப்புகளைப் பெற்று, இலாபம் சம்பாதிப்பதற்காக வர்த்தகர்கள், தனிநபர்கள் ஆகியோருக்கும்,
- விவசாயம், தொழிற்சாலைகள், போக்குவரத்து போன்ற துறைகளுக்கும் கடன்களை வழங்குகின்றன.

எ.கா :
1. ஸ்டேட்பாங்ஆப் இந்தியா 2. கரூர் வைஸ்யா வங்கி
3. ஸ்டாண்டர்டு சார்ட்டர்டு வங்கி.

3) வளர்ச்சி வங்கிகள்
- தொழில்களுக்கான நிதிகளைப் பெரிய அளவில் வழங்குவது,
- அவைகளின் விரிவாக்கம், நவீனமயமாக்கல் ஆகியவற்றிற்கு நிதி அளிப்பது போன்ற சேவைகளைச் செய்வது வளர்ச்சி வங்கிகள் எனும் தனி வகை வங்கிகள் ஆகும்.
- மேலும் அவை தொழில்துறை வங்கிகள் எனவும் அழைக்கப்படுகின்றன.

எ.கா:
I. இந்தியத் தொழில் நிதிக் கழகம் - IFCI
II. இந்தியச் சிறு தொழில்கள் வளர்ச்சி வங்கி - SIDBI
III. முத்ரா வங்கி (குறுந்தொழில் வளர்ச்சிக்காக)

4) வெளிநாட்டு வங்கிகள்
- வெளிநாட்டில் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தையும், இந்தியாவில் கிளை அலுவலகத்தையும் கொண்ட வங்கிகள், வெளிநாட்டு வங்கிகள் என்று அழைக்கப்படுகின்றன.
- எ.கா
  1. பாங்க் ஆ.ப் அமெரிக்கா - அமெரிக்கா
  2. பார்க்லேஸ் பாங்க் - இங்கிலாந்து
  3. டியுட்செபாங்க் - மேற்கு ஜெர்மனி



5) கூட்டுறவு வங்கிகள்
- இந்தியாவில் உள்ள அனைத்துக் கூட்டுறவு வங்கிகளும் அதன் வாடிக்கையாளர்கள் அல்லது அதன் உறுப்பினர்களாக உள்ள விவசாயிகள், சிறிய வர்த்தகர்கள் போன்றவர்களுக்குச் சொந்தமானது.
- இந்தியக் கூட்டுறவு வங்கிகள் நகர்ப்புறங்களை அல்லது கிராமப்புறங்களை அடிப்படையாகக் கொண்டவை.
- எ. கா :
  I. தேசிய வேளாண் கூட்டுறவு சந்தைப்படுத்தல் கூட்டமைப்பு இந்தியா லிமிடெட்.
  II. தமிழ்நாடு மாநிலத் தலைமை கூட்டுறவு வங்கி - தலைமை அலுவலகம், சென்னை
  III. மதுரை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி லிமிடெட்
  IV. வத்தலகுண்டு கூட்டுறவு நகர வங்கி லிமிடெட், திண்டுக்கல் மாவட்டம்

6) சிறப்பு வங்கிகள்
- அரசாங்கத்தால் சிறப்பு நோக்கங்களுக்காகச் சில வங்கிகள் உருவாக்கப்படுகின்றன.
- இந்திய ஏற்றுமதி - இறக்குமதி வங்கிச் சட்டம் 1981 இன் படி இந்திய ஏற்றுமதி - இறக்குமதி வங்கி உருவாக்கப்பட்டது.
- அதன் முக்கிய நோக்கம், இந்திய வணிகர்களின் சர்வதேச வர்த்தகத்தை மேம்படுத்துவது ஆகும்.
- எ.கா :
  I. இந்திய ஏற்றுமதி - இறக்குமதி வங்கி (EXIM வங்கி)
  II. தேசிய வீட்டு வசதி வங்கி (NHB)

7) வட்டாரக் கிராமிய வங்கிகள்
- வட்டாரக் கிராமிய வங்கிச் சட்டம் 1976 இன் படி மத்திய அரசு, மாநில அரசு மற்றும் ஒரு பங்களிப்பு வங்கி ஆகியோர் கூட்டாக இணைந்து இது அமைக்கப்படுகிறது.
- 50:15:35 என்ற விகிதத்தில் இவர்கள் பங்கு மூலதனம் வழங்குகின்றனர்.
- இவ்வங்கி கிராமப்புறங்களில் குறைந்த செலவிலான நிறுவனங்களாக நிறுவப்படுகின்றது.
- இவ்வங்கியின் நோக்கம் கூட்டுறவுச் சங்கங்களோடு சேர்ந்து கிராமப்புறப் பொருளாதாரத்தை மேம்படுத்தச் செய்வதாகும்.
- அவைகள் கிராமப் பொதுமக்களிடமிருந்து வைப்புகளைத் திரட்டி, கிராமப்புறக் கைவினைஞர்களுக்கும், சிறிய தொழில் முனைவோருக்கும், விவசாயிகளுக்கும் கடனுதவி அளிக்கிறது.
- எடுத்துக்காட்டுகள்:
  i. பாண்டியன் கிராம வங்கி, திருமங்கலம், மதுரை, தமிழ்நாடு
  ii. பல்லவன் கிராம வங்கி, சேலம், தமிழ்நாடு

8) உள்ளூர் பகுதி வங்கிகள்
- உள்ளூர் பகுதி வங்கி (LAB) திட்டம் ஆகஸ்ட்1996 இல் இந்திய ரிசர்வ் வங்கியால் அறிமுகப்படுத்தப்பட்டது.
- கிராமப்புற மற்றும் சிறு நகர்ப்புறப் பகுதிகளில் சிறிய தனியார் வங்கிகளாக உள்ளூர் பகுதி வங்கிகள் அமைக்கப்படுகின்றன.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

- ஒவ்வொரு வங்கியும் அருகில் உள்ள இரண்டு அல்லது மூன்று மாவட்டங்களைஇணைத்துச் சேவை செய்கின்றது

9) <u>சிறிய நிதி வங்கிகள்</u>

- சிறிய நிதி வங்கிகள்(SFBs) , வங்கிகள் இல்லாத பகுதிகளிலும் வங்கி சேவை குறைவாக உள்ள பகுதிகளிலும் நிதி உதவி வழங்க ஏற்படுத்தப்பட்ட தனியார் வங்கிகள் ஆகும். அவைகளின் நோக்கங்கள்,
  அ. கிராமப்புறச் சேமிப்புக்களைத் திரட்டுதல் (வைப்புகளைஏற்றுக் கொள்ளுதல்) மற்றும்
  ஆ. i. சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு
  ii. மிகச் சிறிய மற்றும் சிறிய தொழிற்சாலைகளுக்கு மற்றும்
  iii. மற்ற அமைப்பு சாரா பிரிவு நிறுவனங்களுக்குக் கடன் வழங்குதல்.

10) <u>செலுத்தல் வங்கி</u>

- சிறு தொழில்கள், குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள், மற்றும் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள்ஆகியோருக்குப் பணம் செலுத்தல் மற்றும் நிதி சேவைகள் பரவலாக்கப்படுவதை விரிவுபடுத்துவதற்காகச் செலுத்தல் வங்கிகள் அமைக்கப்பட்டன.

11 ) <u>பன்முகத்தன்மை கொண்ட மேம்பாட்டு வங்கிகள்</u>

- பன்முகத்தன்மை கொண்ட மேம்பாட்டு வங்கி பல நாடுகளைச் சேர்ந்த அரசாங்கங்களால் உருவாக்கப்பட்டுள்ளது.
- இதன் உறுப்பினர் நாடுகளாக வளர்ந்த நன்கொடை நாடுகள் மற்றும் கடன் பெறும் நாடுகள் உள்ளன.

( அல்லது )

43. ஆ) வருமானவரியின் அடிப்படை கருத்துக்கள் எவையேனும் ஐந்தினை விளக்கி எழுதுக

1) <u>மதிப்பீட்டிற்குரியவர் : பிரிவு 2(7)</u>

- "சட்டத்தின் கீழ் யாரால் வருமான வரி அல்லது ஏதேனும் பிற பணத் தொகை செலுத்தப்படத்தக்கதாக உள்ளதோ அந்நபர் மதிப்பீட்டிற்குரியவராவார்"
- மேலும் தன்னுடைய வருமானம் அல்லது நட்டம் அல்லது தனக்கு வரவேண்டிய பாக்கித் தொகை ஆகியவற்றிற்காக வருமான வரிச்சட்டத்தின் கீழ் வருமான வரி மதிப்பீட்டு நடவடிக்கைக்கு உட்பட்ட ஒவ்வொரு நபரும் மதிப்பீட்டிற்குரியவர் என்ற சொல்லில் அடங்குவர்.
- வருமான வரிச் சட்டம் மூன்று வகையான மதிப்பீட்டிற்குரியவர்களைக் கண்டுணர்ந்துள்ளது.

2) <u>"நபர்" : பிரிவு 2(31)</u>

1. தனிநபர்.
2. இந்து கூட்டுக் குடும்பம்
3. கூட்டுப்பங்கு நிறுமம்
4. கூட்டாண்மை நிறுவனம்.
5. பல நபர்களின் சங்கங்கம் அல்லது தனிநபரின்களின் குழுமம் ( கூட்டுறவு)
6. உள்ளாட்சி நிர்வாகம்.
7. சட்ட ரீதியான செயற்கை நபர்கள்



3) <u>மதிப்பீட்டு ஆண்டு: பிரிவு 2(9)</u>

- ஒரு வருடத்தில் ஈட்டப்பட்ட வருமானம் அடுத்த ஆண்டில் வரி விதிப்பிற்கு உட்படும்.
- இதுவே மதிப்பீட்டு ஆண்டு எனப்படுகிறது.
- ஏப்ரல் 1 ஆம் தேதி தொடங்கி, அடுத்த ஆண்டு மார்ச் 31- ஆம் தேதி முடியும் காலகட்டமே மதிப்பீட்டு ஆண்டு எனப்படுகிறது.

4) முந்தைய ஆண்டு: பிரிவு 3

- வருமானம் ஈட்டப்பட்ட ஆண்டு, முந்தைய ஆண்டு எனப்படுகிறது.
- முந்தைய ஆண்டு என்பது, எப்பொழுதும் ஏப்ரல் 1 இல் தொடங்கி மார்ச் 31 இல் முடியக் கூடிய வகையில் இருக்கும்.
- மேலும் இது நிதியாண்டு என்றும் அழைக்கப்படும்.

5) <u>வருமனம்</u>: பிரிவு 2(24)

1) வியாபாரம் அல்லது தொழிலில் ஏற்பட்ட லாபம் மற்றும் ஆதாயம்.
2) பங்காதாயம்
3) தொண்டு நிறுவனங்கள் அல்லது அறக்கட்டளைகள், மருத்துவமனைகள் மற்றும் ஏனைய கல்வி நிறுவனங்கள் பெரும் நன்கொடைகள்.
4) ஊதியத்திற்கு மாற்றாக பெறும் இதர வருமானங்கள்.
5) ஏற்றுமதிக்காக வழங்கப்படும் பல்வேறு விதமான ஊக்கத்தொகைகள்.
6) கூட்டாளி ஒருவர், கூட்டாண்மை நிறுவனத்திலிருந்து பெறும் வட்டி, ஊதியம், ஊக்கத்தொகை, கழிவு அல்லது மேல் வருமானம்.
7) மூலதன ஆதாயங்கள்.
8) தமது உறுப்பினர்களுடன் கூட்டுறவுச் சங்கமாக வங்கியில் வணிகத்தை மேற்கொண்டு, பெற்ற இலாபங்களும், ஆதாயங்களும்.
9) கருதப்பட்ட வருமானங்கள்.
10) சேமநல நிதி அல்லது ஓய்வுகால நிதி போன்றவைகள் மூலமாக பெறப்பட்ட தொகை.
11) பிரதான காப்புறுதி காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட கூடுதல் சிறப்பு தொகை.

6) <u>வேளாண்மை வருமானம்</u> : பிரிவு 2( 1A )

➢ பிரிவு 2 (1A) இன் படி, விவசாயம் சார்ந்த வருமானத்தில் அடங்குவன பின்வருமாறு:

1) இந்தியாவில் அமைந்துள்ள மற்றும் விவசாயம் சார்ந்த நோக்கங்களுக்கு பயன்படுத்தப்படும் நிலத்தில் இருந்து, பெறப்பட்ட ஏதேனும் வாடகை அல்லது வருவாய்.
2) விவசாய விளைபொருட்களை சந்தைக்கோ அல்லது விற்பனைக்கோ தகுந்ததாக மாற்றுவதற்கென பெறப்பட்ட, ஏதேனும் கட்டணம், விவசாயம் விளைபொருட்களை பதனம் செய்தல் உள்ளிட்ட விவசாயம் சார்ந்த நடவடிக்கைகளின் மூலம் நிலத்தில் இருந்து பெறப்பட்ட ஏதேனும் வருமானம்.
3) குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஒரு பண்ணை கட்டிடத்தில் இருந்து, பெறப்பட்ட வருமானம்.
4) நாற்றுப்பண்ணையில் வளர்க்கப்பட்ட நாற்று அல்லது செடி மூலம் பெறப்பட்ட வருமானம்.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

- இந்த வேளாண் வருமானம் முழுவதும் வருமான வரியில் இருந்து, விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

44. அ) ஒப்பந்தம் மற்றும் உடன்படிக்கைக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

| வ. எண் | அடிப்படை | ஒப்பந்தம் | உடன்படிக்கை |
|---|---|---|---|
| 1 | வரைவிலக்கணம் | சட்டத்தால் நடைமுறைப்படுத்தப்படும் உடன்படிக்கையாகும் | உடன்பாடு என்பது, மறுபயன் உருவாக்கும் ஒவ்வொரு உறுதி மொழியும், உறுதிமொழிகளில் ஒவ்வொரு தொகுதியும் |
| 2 | செயலாக்கத் தன்மை | அனைத்து ஒப்பந்தங்களும் செயல்படுத்த முடியும் | அனைத்து உறுதிமொழிகளும் செயல்படுத்த முடியாது |
| 3 | பரஸ்பர உறவு | ஒப்பந்தம் என்பது, உடன்படிக்கையை உள்ளடக்கியது | உடன்படிக்கையில், எல்லா ஒப்பந்தம் உள்ளடக்கியது அல்ல |
| 4 | செல்லக்கூடியது | சட்டத்திற்கு உட்பட்ட உடன்படிக்கை மட்டுமே ஒப்பந்தமாகும் | சட்டத்திற்கு உட்பட்ட அல்லது உட்படாதவையும் உடன்படிக்கை ஆகும் |
| 5 | சட்டபூர்வமான கடமை | அனைத்து ஒப்பந்தங்களிலும் சட்டபூர்வமான கடமை உள்ளன | சட்டபூர்வமான கடமையானது, அனைத்து உடன்படிக்கையிலும் இருக்க வேண்டிய அவசியம் இல்லை |

( அல்லது )

44. அ) தொழில் நெறிமுறைகளின் அடிப்படைக் கூறுகளை விளக்கவும்.

1) <u>உயர்நிலை மேலாண்மையின் ஆதரவு</u> :
   - நன்னெறி விதிகளை ஏற்படுத்துவது ஒவ்வொரு தொழிலமைப்பின் அடிப்படைக் கடமையாகும்.
   - அப்படி நன்னெறி விதிமுறைகளை உருவாக்குவதில் உயர்மட்ட மேலாண்மையின் தார்மீக ஆதரவு இன்றியமையாதது.
   - தார்மீக நன்னெறி விதிமுறைகளை உருவாக்க ஒவ்வொரு தொழிலமைப்பும் ஒரு குழுவை அமர்த்தி அதில் அனைத்து ஊழியர்களின் பிரதிநிதிகளும் இடம் பெறச் செய்ய வேண்டும்.
2) <u>நன்னெறி நடத்தை விதிகளை உருவாக்குதல் மற்றும் பரப்புதல்</u>:
   - தொழில் அமைப்புகள் நன்னெறி விதிகளை உருவாக்கி அதை எழுத்து வடிவில் பணிபுரியும் அனைவருக்கும் புரியும்படி தெரிவிக்க வேண்டும்.



   - இந்த நன்னெறி விதிகள் தொழில் அமைப்பில் இயங்கும் ஒவ்வொரு பிரிவிற்கும் தனித்தனியே உருவாக்கிட வேண்டும்
3) <u>நன்னெறி விதிமுறைகளை கடைபிடிப்பதைக் கண்காணித்தல்</u> :
   - நன்னெறி விதிமுறைகளை ஒவ்வொரு பிரிவும் அல்லது துறையும் முறையாக கடைபிடிக்கின்றனவா என ஆய்வு செய்யகண்காணிப்பு அவசியம்.
   - இதனை நன்னெறி கண்காணிப்பு என்று அழைப்பர்.
4) <u>அனைத்து ஊழியர்களையும் ஈடுபடுத்துதல்</u> :
   - நன்நெறி விதிகளுக்கு பணியாளர்களின் முழு ஆதரவைத் திரட்ட நன்நெறி விதிகளை உருவாக்குவதற்கு முன்பாக அதைப் பற்றி சம்பந்தப்பட்ட பணியாளர்களிடம் பல்வேறு மட்டங்களில் விவாதம் நடத்தி அவர்களின் எண்ணப்போக்கை அறிந்து அதற்கு ஏற்றப்படி பணியாளர்கள் அனைவரையும் உள்ளடக்கிய ஒரு நன்நெறி குழு உருவாக்கப்பட வேண்டும்
5) <u>நன்னெறி பலனை அளித்தல்</u> :
   - நன்நெறி விதிகளினால் விளைந்திட்ட பலனை ஆய்வு செய்ய நன்நெறி தணிக்கை அவசியம்.
   - ஆனால் சில வகை செயல்களை எண் ரீதியாக வெளிப்படுத்துவது கடினம்..

45. அ) போக்குவரத்தின் பல்வேறு வகைகளை விவரிக்க. ( ஏதேனும் 5 )

அ) <u>நிலப் போக்குவரத்து</u>

1. <u>பொதி விலங்குகள்</u>
   - மலை, காடு மற்றும் பாலைவனம் போன்ற பின்தங்கிய பகுதிகளிலும், சிறு சிறு சுமைகளை ஏற்றிச் செல்லப் பயன்படுத்தப்படும்,
   - குதிரை, கோவேறு கழுதை, கழுதை, ஒட்டகம் மற்றும் யானை போன்ற விலங்குகளை பொதி விலங்குகள் என்று அழைக்கப்படுகின்றது.
2. <u>மாட்டு வண்டிகள்</u>
   - இந்தியாவில் பொருள்கள் மற்றும் மக்களை ஏற்றிச் செல்வதற்குக் கிராமப் பகுதிகளில் பெருவாரியாகப் பயன்படுத்தப்படும் சாலைப் போக்குவரத்து மாட்டு வண்டிகளேஆகும்.
   - இது அருகிலுள்ள சந்தைகள் மற்றும் ரயில் நிலையங்களுடன் கிராமங்களை இணைக்கிறது
3. <u>சாலை போக்குவரத்து</u>
   - சாலை போக்குவரத்து என்பது, குறுகிய மற்றும் நடுத்தர தூரத்திற்கு மிகவும் ஏற்றதாகவும், சக்தி வாய்ந்ததாகவும் உள்ளது.
   - மேலும் மற்ற போக்குவரத்து வகைகளின் திறனை அதிகரிக்கவும், அதற்கு துணை புரியவும் உதவுகிறது.
4. <u>இயந்திர சரக்கேற்றிகள் மற்றும் பேருந்துகள்</u>
   - நாகரிகத்தின் தொடக்கத்தில் இருந்தே, மக்கள் சாலைகள் அமைத்தும், சக்கரம் பூட்டிய வண்டிகளைப் பயன்படுத்தியும் பொருள்கள் மற்றும் மக்களை ஏற்றிச் சென்று போக்குவரத்தினை எளிமைப்படுத்தியுள்ளனர்.
5. <u>டிராம் வண்டிகள்</u>
   - 19 ஆம் நூற்றாண்டில் பெரிய நகரங்களுக்கு பொருத்தமான ஒரு போக்குவரத்து முறையாக இது தோன்றியது.
   - டிராம் வண்டிகள் முதலில் குதிரைகளாலும், பின்னர் நீராவி சக்தியாலும் இப்போது மின்சாரத்தினாலும் இயக்கப்படுகிறது.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

6. <u>தொடர்வண்டி போக்குவரத்து</u>

- ஜேம்ஸ் வாட் அவர்களின் கண்டுபிடிப்பான நீராவி இயந்திரம், உலகெங்கிலும் உள்ள போக்குவரத்து முறையில் மாபெரும் புரட்சியினை ஏற்படுத்தியது.
- தொடர் வண்டிகள் போக்குவரத்து, உலகெங்கிலும் மிகவும் முறையாக ஒழுங்கமைக்கப்பட்ட போக்குவரத்தாக உள்ளது.
- நீண்டதூரத்திற்கு மேல் கனரக சரக்குகளை சுமந்து செல்வதற்கு, தொடர் வண்டிகள் மலிவான மற்றும் விரைவான வழி வகைகளாக இருக்கின்றன.

<u>போக்குவரத்து சமீபத்திய வளர்ச்சிகள்</u>

1. மெட்ரோ இரயில் 2. மோனா இரயில் 3. புல்லட் இரயில் 4. குழாய் போக்குவரத்து
5. கன்வேயர் போக்குவரத்து 6. கயிறு வழி போக்குவரத்து 7. உயர் சுழற்சி வளையப் போக்குவரத்து.

ஆ) <u>நீர்வழிப் போக்குவரத்து</u>

i) உள்நாட்டு போக்குவரத்து

ii) பெருங்கடல் அல்லது கடல் போக்குவரத்து

இ) விமானப் போக்குவரத்து

( அல்லது )

45. ஆ) **பன்னாட்டு நாணய நிதியத்தின் பணிகளை குறிப்பிடுக. ( ஏதேனும் 5 )**

1) இது பன்னாட்டு அளவில் குறுகிய கால கடன் நிறுவனமாக செயல்படுகிறது.
2) இது பரிமாற்ற விகிதங்களின் சாதாரண வழிகாட்டுதல்களை செய்வதற்கு உதவுகிறது.
3) இது உறுப்பு நாடுகளின் நாணயங்களை தன்னகத்தே வைத்துள்ளது. அதிலிருந்து கடன் வாங்கக் கூடிய உறுப்பினர் நாடுகள், நாணய மதிப்பை பெற்றுக்கொள்ளலாம்.
4) நல்ல வலுவான பொருளாதார மற்றும் நிதிக் கொள்கையை பின்பற்றும் நாடுகளுக்கு பொருளாதார நிலைத்தன்மை மற்றும் உலகளாவிய வளர்ச்சிக்கும் வழி வகுக்கிறது.
5) உறுப்பு நாடுகளில் பயனுள்ள கொள்கைகளை வலுப்படுத்தவும், செயல்படுத்தவும் தொழில்நுட்ப உதவி மற்றும் பயிற்சி அளிக்கிறது. வங்கியியல், நிதி, நாணய மற்றும் பரிமாற்றக் கொள்கைகளை வடிவமைப்பதில் தொழில்நுட்ப உதவி வழங்கப்படுகிறது.
6) உறுப்பினர் நாடுகளின் வாணிக சமநிலையில் ஏற்படும் சமமற்ற தன்மையைச் சரி செய்ய உதவுகிறது.

46. அ) **உலகளாவிய வைப்பு இரசீதிற்கும் அமெரிக்க வைப்பு இரசீதிற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?** ( ஏதேனும் 5 )

| வ.எண் | வேறுபாட்டின் அடிப்படைகள் | உலகளாவிய வைப்பு இரசீது GDR | அமெரிக்க வைப்பு இரசீது ADR |
|---|---|---|---|
| 1 | மதிப்பிடுதல் | இது எந்த நாட்டுப் பணத்தின் மதிப்பிலும் குறிப்பிடப்படும் | இது அமெரிக்க டாலரில் மட்டுமே குறிப்பிடப்படும் |
| 2 | யாருக்கு இது வெளியிடப் படும் | ஒன்று அல்லது அதற்கு மேல் உள்ள சந்தையில் உள்ள முதலீட்டாளருக்கு வெளியிடப்படும் | அமெரிக்கக் குடிமகனாக உள்ள முதலீட்டாளருக்கு மட்டுமே வெளியிடப்படும் |
| 3 | எங்குப் பட்டியலிடப் படும் | அமெரிக்கா தவிர்த்த, இதர பங்கு மாற்றகங்களில் பட்டியலிடப் படும் | அமெரிக்கப் பங்கு மாற்றகங்களில் மட்டும் பட்டியலிடப் படும் |
| 4 | ஒப்புதல் | இதனை வெளியிட, அந்நியச் செலாவணி கட்டுப்பாட்டு வாரியத்தின் ஒப்புதல் தேவை இல்லை | இதனை வெளியிட, அமெரிக்கப் பிணையங்கள் மற்றும் மாற்றக இயக்ககத்தின் ஒப்புதல் தேவை. |
| 5 | வெளியீட்டு வழிமுறை | இவை, பட்டியலிடப்பட்ட முழுமையான எண்ணிக்கை உடைய நேர்மைப் பங்குகளாக வெளியிடப்படும். | இவை, சிறு அலகுகளாக பிரிக்கப்பட்ட நேர்மைப் பங்குகளாக வெளியிடப்படும் |
| 6 | மாற்றுகைத் தன்மை | உலகம் முழுவதும் மாற்றகூடியது | அமெரிக்காவில் மட்டும் மாற்றத்தக்கது |



( அல்லது )

46. அ) **சில்லறை வியாபாரிகளின் வகைகள விவரி. ( ஏதேனும் 5 )**

1) <u>சுமை தூக்கி மற்றும் கூவி விற்கும் வியாபாரிகள்</u>
   - பொருள்களை தம் தலையிலோ அல்லது முதுகிலோ தூக்கிக்கொண்டு வீடு வீடாக நடந்து சென்று வியாபாரம் செய்பவர்கள் சுமைதூக்கி வியாபாரிகள் என அழைக்கப்படுவர்.
   - ஏதேனும் ஒரு வசதியான வண்டியில் பொருட்களைவைத்து பேருந்து நிலையம், தொடர்வண்டி நிலையம், குடியிருப்புகள் மற்றும் பொது இடங்களுக்குச் சென்று கூவிக்கூவி விற்பனை செய்பவர்கள் கூவி விற்கும் வியாபாரிகள் என்பர்.
2) <u>நடைபாதை வியாபாரிகள்</u>
   - வீதிகள் குறுக்கிடும் இடங்களின் ஓரங்களிலும், நடைபாதைகளிலும் தற்காலிகமாக பூ, பழம், காய்கறி, புத்தகங்கள் போன்றவற்றை கொண்டுவந்து விற்பனை செய்பவர்கள் நடைபாதை வியாபாரிகள் எனப்படுவர்.
3) <u>சந்தை வியாபாரிகள்</u>
   - ஒரு குறிப்பிட்ட நாளிலோ அல்லது தேதியிலோ என நடைபெறும் சந்தைகளுக்குச் சென்று விற்பவர்கள் சந்தை வியாபாரிகள் எனப்படுவர்.
   - குறைந்த விலையுடைய ஒரு குறிப்பிட்ட வகையான அன்றாடம் பயன்படுத்தும் பொருட்கள் மட்டும் இவர்கள் வியாபாரம் செய்வர்.
4) <u>இடம்பெயர் வியாபாரிகள்</u>
   - மக்கள் நெருக்கம் மிகுந்த வியாபாரம் நடக்குமிடங்களில் தற்காலிகமாக கடை வைத்து சில நாட்கள் மட்டும் தங்கி இருந்து விற்பனை செய்பவர்கள் இடம்பெயர் வியாபாரிகள் எனப்படுவர்.
5) <u>தெருக்கடை வியாபாரிகள்</u>
   - மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள தெருக்களின் முனைகளிலோ, திரும்பும் இடங்களிலோ கடை அமைத்து ஆடைவகைகள், பொம்மைகள், தின்பண்டங்கள், குளிர் பானங்கள் போன்றவை விற்பவர்கள் தெருக்கடை வியாபாரிகள் என்பர்.

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

www.Padasalai.Net

6) **பொதுப் பண்டகசாலை**

- நுகர்வோர் தங்கள் வீட்டின் அருகிலேயே தங்களுக்குத் தேவையான பொருட்களை வாங்குவதற்கு ஏற்றவாறு அனைத்து வகைப் பொருட்களையும் குறைந்த அளவில் வாங்கி வைத்து வியாபாரம் செய்யும் இடம் பொதுப் பண்டகசாலை எனப்படும்

7) **ஒரே வகை பண்டக சாலை**

- ஒரு குறிப்பிட்டவகை பொருட்களை மட்டுமே விற்பனை செய்யும் சில்லறை வியாபாரம் ஒரே வகை பண்டகசாலை எனப்படும்.
- ஆயத்த ஆடைகள் மட்டும் விற்கும் கடைகள், காலனிகள் மட்டும் விறகும் கடைகள் எழுதுபொருட்கள் மட்டும் விற்கும் கடைகள், அறைகலன் மட்டும் விற்கும் கடைகள் போன்றவை இதில் அடங்கும்.

8) **சிறப்பு பண்டக சாலைகள்**

- ஒரு வகைப் பொருட்களில் ஒரு குறிப்பிட்ட வழி பொருள்களை மட்டும் விற்பனை செய்யும் சில்லறைக் கடைகள் சிறப்பு பண்டகசாலைகள் எனப்படும்.
- இனிப்பு வகையில் அல்வா மட்டும் விற்போர், துணிக்கடையில் குழந்தை ஆடைகள் மட்டும் விற்போர் முதலியன அடங்கும்

9) **பயன்படுத்திய பொருட்கள் விற்போர்**

- பயன்படுத்திய பொருட்கள் மற்றும் தயாரிப்பு நிறுவனங்கள் முதல் தரமல்ல என்று ஒதுக்கிய பொருட்கள் ஆகியவற்றை விற்பனை செய்வோர் பயன்படுத்திய பொருட்கள் விற்போர் என்படுவர்.
- அறைகலன், புத்தகங்கள், பாத்திரங்கள், ஆடைகள், வாகனங்கள் உள்ளிட்டவை இவ்வாறு விற்கப்படுகின்றன.

**நிலையிட பேரளவு சில்லறை வியாபார நிறுவனங்கள்**

- பேரளவு நிலையிடச் சில்லறை வியாபார நிறுவனங்கள் பின்வருமாறு.
  1. துறைவாரிப் பண்டக சாலைகள்
  2. மடங்குக் கடைகள்
  3. சிறப்பங்காடிகள்
  4. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்
  5. வாடகைக் கொள்முதல் மற்றும் தவணைமுறை விற்பனை நிலையங்கள்
  6. அஞ்சல்வழி விற்பனையகங்கள்
  7. தானியங்கி விற்பனை எந்திரங்கள்
  8. வணிக வளாகங்கள்
  9. தொலைத் தொடர்புச் சந்தை
  10. மின்னணு வழி வர்த்தகம்

---

### 47. அ) வெளிநாட்டு வியாபாரத்தின் பல்வேறு வகைகளை விவரி?

**வெளிநாட்டு வியாபாரம் மூன்று வகைப்படும். அவை** : -

அ) இறக்குமதி வியாபாரம் ஆ) ஏற்றுமதி வியாபாரம் இ) மறு ஏற்றுமதி வியாபாரம்.

**அ) இறக்குமதி வியாபாரம்**

- உள்நாட்டுத் தேவைக்காக, வெளிநாட்டில் இருந்து பொருட்களை வாங்குவதே, இறக்குமதி வியாபாரம் ஆகும்.
  - **உதாரணமாக**, இந்தியா வளைகுடா நாடுகளில் இருந்து, பெட்ரோலியப் பொருட்களை இறக்குமதி செய்தலைக் கூறலாம்.



**ஆ) ஏற்றுமதி வியாபாரம்**

- உள்நாட்டு உற்பத்திப் பொருட்களை, வெளிநாடுகளுக்கு விற்பது, ஏற்றுமதி வியாபாரம் ஆகும்.

  **உதாரணமாக,** இந்தியா இரும்பு, எ ஃகு போன்றவற்றை, ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்தலைக் கூறலாம்.

**இ) மறு ஏற்றுமதி வியாபாரம்**

- ஒரு நாட்டில் இருந்து பொருட்களை இறக்குமதி செய்து, அவற்றை வேறுநாடுகளுக்கு ஏற்றுமதி மூலம் விற்பது மறு ஏற்றுமதி வியாபாரம் ஆகும்.

  **உதாரணமாக**, இந்தியாவில் சூரத், நகரின் வைர வியாபாரிகள் தெற்கு ஆப்ரிக்காவில் இருந்து துண்டிக்கப்படாத வைரங்களை இறக்குமதி செய்து, அவற்றை துண்டாக்கி, பட்டைதீட்டி, மீண்டும், ஆம்ஸ்டர்டம் நகரில் உள்ள பன்னாட்டு வைரச் சந்தைக்கு மறு ஏற்றுமதி செய்தலைக் கூறலாம்.

( அல்லது )

### 47. ஆ) செலுத்தல் சமநிலையின் சிறப்பம்சங்கள் ஏதேனும் ஐந்தினை விவரி.

1. இது ஒரு நாடு மற்றும் உலகின் பிற நாடுகளுக்கு இடையேயான அனைத்து பொருளாதார பரிமாற்றங்களுக்கான முறையான பதிவு ஆகும்.
2. இது மூன்று மாதங்களுக்கு ஒரு முறையோ அல்லது 12 மாத காலத்திற்கோ தயாரிக்கப்படுகிறது.
3. இது கண்ணுக்குப் புலனாகக்கூடிய மற்றும் கண்ணுக்கு புலனாகாத பெறுதல்கள் மற்றும் செலுத்துதல்களை உள்ளடக்கியது.
4. இது நடப்பு கணக்கு மற்றும் மூலதன கணக்கில் பதிவு செய்யப்படும் அனைத்துப் பொருளாதார நடவடிக்கைகளையும் உள்ளடக்கியது.
5. பொருளாதார நடவடிக்கைகள், இரட்டை பதிவு முறை கோட்பாட்டின்படி பதிவு செய்யப்படுகின்றன. அதன்படி பெறுதல்கள் வரவு பக்கத்திலும, செலுத்துதல்கள் பற்று பக்கத்திலும் பதிவு செய்யப்படுகின்றன.
6. இது அயல்நாட்டு வாணிகத்தில் ஒரு நாட்டின் நிலையை எடுத்துக் கூறுகிறது .
7. பிறநாட்டுக்குச் செலுத்த வேண்டிய தொகையைவிட, பெறுதல்கள் அதிகமாக இருக்கும் போது செலுத்தல் நிலை சாதகமான அல்லது உபரி நிலையைக் காட்டுகிறது. பிறநாட்டுக்குச் செலுத்த வேண்டிய தொகையைவிட, பெறுதல்கள் குறைவாக இருக்கும்போது அது பாதகமான அல்லது பற்றாக்குறை நிலையைக் காட்டுகிறது.
8. வெப்பநிலைமானி மனித உடல் வெப்பநிலையைக் காட்டுவது போல, செலுத்தல் நிலை நாட்டின் ஆரோக்கியமான பொருளாதார நிலையை அறியப் பயன்படுகிறது. சாதகமான செலுத்தல் சமநிலை ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தையும், பாதகமான செலுத்தல் சமநிலை ஒரு நாட்டின் பொருளாதாரப் பின்னடைவையும் குறிக்கிறது.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com